# தாம்பரம்–வேளச்சேரி பாதையில் மெட்ரோ ரெயில்

## கவர்னர் உரையில் தகவல்

சென்னை, ஜன.06– தாம்பரம்–வேளச்சேரி பாதையில்மெட்ரோரெயில் இயக்கப்படும் என்று கவர்னர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டசபையில் கவர்னர்உரையில்கூறப்பட்டிருப்பதாவது:–

அனைத்துப் பகுதிகளையும் அடையும் தரமான சாலைத் தொடரமைப்பு குறித்துதமிழ்நாடுஎன்றென்றும் பெருமை கொண்டுள்ளது. ஒருங்கிணைந்தசாலை உட்கட்டமைப்புமேம்பாட்டுத்திட்டத்தின்கீழ், சாலை தொடரமைப்பு தொடர்ந்து தரம் உயர்த்தப்படுவதையும், சாலை இணைப்புகளை தொடர்ந்து மேம்படுத்துவதையும், சாலைப் பாதுகாப்பினை அதிகரிப்பதையும் இந்த அரசு உறுதி செய்து வருகிறது. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் 6,448 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை–கன்னியாகுமரி தொழில்வழித்தடத்தினால் பயனடையக் கூடிய பகுதியில் சாலைத் தொடரமைப்பை தரம் உயர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### விபத்துகள் குறைவு

ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின்நிதியுதவியுடன்2,673.42கோடி ரூபாய் மதிப்பீட்டில், எண்ணூர் துறைமுகத்திலிருந்து தச்சூர் வரையிலான சென்னைவெளிவட்டச்சுற்றுச்சாலைதிட்டத்தின்முதற்கட்டம்தொடங்கப்பட்டுள்ளது. இச்சாலையின் மீதமுள்ள பகுதிகளுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன. அரசு மேற்கொண்டபல்வேறுமுயற்சிகளின் பயனாக, 2016 ஆம் ஆண்டில் 71,431 ஆக இருந்தசாலைவிபத்துகளின் எண்ணிக்கை, 2018 ஆம் ஆண்டில் 63,923 ஆகவும், சாலை விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டில் 16,092–லிருந்து2018ஆம்ஆண்டில் 11,378 ஆகவும் கணிசமாகக் குறைந்துள்ளது.

சாலைவிபத்துகளில்உயிரிழந்தோரின்எண்ணிக்கை, 2010ஆம் ஆண்டில்10,000 வாகனங்களுக்குசராசரியாக 12ஆகஇருந்தது. 2019 ஆம் ஆண்டில் இது, மூன்றாகக் குறைந்துள்ளது.

மாநிலத்தின் மூலைமுடுக்குகளுக்கு எல்லாம் அளிக்கப்பட்டுள்ளதரமான பேருந்துப் போக்குவரத்து வசதி, தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது. நாளொன்றுக்கு 1.63கோடி பயணிகள் மாநிலப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் மேற்கொள்கின்றனர். இந்த பொதுப் போக்குவரத்துப் பயணிப்பின் பங்கை மேலும் அதிகரிப்பதில் அரசு உறுதியாக உள்ளது.

நம் மாநிலத்தில் பேருந்துப் போக்குவரத்துக் கட்டணங்கள் நாட்டிலேயே குறைவாக இருக்கின்ற போதிலும், போக்குவரத்து செயல்திறனை எவ்விதத்திலும் நாம் விட்டுக்கொடுப்பதில்லை. இதற்குச்சான்றாக, 2016–17 ஆம் ஆண்டில், மாநில சாலைப்போக்குவரத்துநிறுவனங்களின் கூட்டமைப்பின் செயல்பாட்டுத் திறன் அளவீடுகளுக்கான11விருதுகளையும், 2017–18 ஆம் ஆண்டில் 9 விருதுகளையும் தமிழ்நாட்டின் 8 மாநிலப் போக்குவரத்துக்கழகங்கள்வென்றுள்ளன. இந்திய அரசின் திட்டம் மற்றும் ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன், மாநிலப் போக்குவரத்துக்கழகங்கள்மின்சார வாகனங்களை பெருமளவில் இயக்கவுள்ளன.

### மெட்ரோ ரெயில்

சென்னை மெட்ரோ ரெயில்வேகமாகவளர்ந்து, சென்னை மாநகருக்குப் பெருமைசேர்க்கின்றது. 45 கி.மீட்டர் நீளத்திற்கான சென்னை மெட்ரோ ரெயிலின்முதற்கட்டம்முழுமையாகமுடிக்கப்பட்டுசெயல்பாட்டில் உள்ளது. திருவொற்றியூர் – விம்கோ நகர்வரையிலானமுதற்கட்டத்தின்நீட்டிப்புப்பணிகள் 2020 ஆம் ஆண்டின் மத்தியில் நிறைவடையும். மேலும் 69,180 கோடி ரூபாய் செலவில் 118.9 கி.மீட்டர்நீளத்திற்குமூன்று வழித்தடங்களை அமைக்கும் இரண்டாம் கட்ட திட்டப் பணிகளைச் செயல்படுத்த அரசு ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது.

இரண்டாம்கட்டப்பணியில், 52.01 கிலோமீட்டர் நீளத்திற்கு நிதியுதவி அளித்திட ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவுமுகமைஒப்புதல் அளித்து, முதல் தவணைக்கான கடன் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இரண்டாம்கட்டத்தின் மீதமுள்ள வழித்தடங்களுக்காக, ஆசியவளர்ச்சிவங்கி, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதியவளர்ச்சிவங்கி ஆகிய பன்னாட்டு நிதியுதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதற்கட்டத்தில், 50 சதவீத பங்குமூலதனத் தொகையை மத்திய அரசு வழங்கியதைப் போலவே, இரண்டாம் கட்ட திட்டத்திலும் 50 சதவீதம் பங்களிப்பதற்கான ஒப்புதலை விரைவில் வழங்குமாறு மத்திய அரசை கேட்டுக்கொள்கிறேன். சாத்தியக்கூறு ஆய்வின் அடிப்படையில், சென்னை விமானநிலையத்திலிருந்து, புதிய புறநகர் பேருந்து நிலையம் அமையவிருக்கும்கிளாம்பாக்கம் வரையிலான 15.3 கிலோ மீட்டர் தூரத்திற்கு, மெட்ரோ ரெயில் வழித்தடத்தை நீட்டிக்க அரசு முடிவு செய்துள்ளது.

தாம்பரம்–வேளச்சேரி வழித்தடத்தில் ஏற்படும் அதிகமான போக்குவரத்து நெரிசலை சமாளிப்பதற்கு, 15.5 கிலோமீட்டர் நீளத்திற்குரெயில்போக்குவரத்து முறை ஒன்றினை அரசு அமைக்கும். இதற்கானவிரிவானசாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கை சென்னை மெட்ரோரெயில்நிறுவனம் தயாரிக்கும்.

எதிர்காலத்தில் அனைத்துவகைபோக்குவரத்துவழிமுறைகளையும் ஒருங்கிணைப்பது அவசியமாகும். சென்னைப்பெருநகரஒருங்கிணைக்கப்பட்டபன்முகப் போக்குவரத்து ஆணையச் சட்டம் இயற்றப்பட்டு, அதற்குண்டான விதிகளும் அரசிதழில்வெளியிடப்பட்டுள்ளது. சென்னைமாநகரக் கூட்டாண்மை என்ற தனித்தன்மை வாய்ந்த வளர்ச்சித் திட்டத்தைஉலகவங்கியின் ஒத்துழைப்புடன் செயல்படுத்ததமிழ்நாடுஅரசுஉத்தேசித்துள்ளது. அதிகாரம் பெற்ற சென்னைப் பெருநகர ஒருங்கிணைக்கப்பட்ட பன்முகப் போக்குவரத்து ஆணையத்தின் மூலமாக, சென்னை நகரின் பல்வேறு போக்குவரத்துமுறைகளை ஒருங்கிணைத்து, மக்களுக்கு தடையற்ற போக்குவரத்தினை வழங்குவதை ஒரு முக்கிய இலக்காக இத்திட்டம் கொண்டுள்ளது.

இவ்வாறு கவர்னர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.